11th November 1965]

* 442 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆலங்குடியில் பெண்களுக்கு என்று தனியாக உயர்நிலைப்பள்ளி ஒன்று ஏற்படுத்த மாவட்ட கலெக்டரிடமிருந்து பரிந்துரைக் கடிதம் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The Director of Public Instruction was asked to take into consideration the request for the opening of a High School at Alangudi, while sending consolidated proposals for the year 1964–65.

திரு. வி. எஸ். எஸ். மணி : தலைவர் அவர்களே, பெண்களுக்கு உயர்நிலைப் பள்ளி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை. தனியார் ஒரு பெண் உயர்நிலைப் பள்ளி துவக்க ஆரம்பத்தால் கட்டவேண்டிய தொகை ரூ. 70,000 ஆக இருக்கிறது. இதைக் குறைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போதுதான் உயர்த்தப்பட்டு இருக்கிறது. ரொம்ப நாளைக்கு முன்பு ரூ. 35,000 ஆக இருந்தது. இந்த நிதியிலிருந்து பள்ளிக்கூட பராமரிப்புச் செலவு செய்யலாம் என்று ஏற்பாடு. இப்போது செலவு எல்லாம் அதிகமாகி இருக்கிறது. ஆகையால் ரூ. 35,000-த்தை ரூ. 70,000 ஆக உயர்த்தி இருக்கிறோம். இன்றைரு ரூ. 35,000-த்தை, 7 தவணைகளில் 7 ஆண்டுகளில் ரூ. 5,000 ஆகக் கட்டலாம் என்று இருக்கிறது. இதைக் குறைப்பதாக உத்தேசம் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியைத் துவக்க ரூ. 10,000 பணம் கட்டவேண்டுமென்று சொல்லப்படுகிறது. தவணைகளாகக் கட்டலாம் என்றிருக்கிறது. பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் முதல் தவணைப் பணத்தை கட்டிவிடுகிறார்கள். அடுத்த தவணைப் பணம் கட்டப்பட வரும்போது பணம் கட்ட வாய்ப்பு ஏற்படுவதில்லை. அதனால் அடுத்த வகுப்பு துவங்குவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என்று சொல்லப்படுகிறது. யாரோ செய்த தவறினால், மாணவர்கள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படுகிறது. இதை அரசாங்கம் பரிசீலித்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாணவர்கள் சரியான பள்ளியைப் பார்த்துத்தான் சேருவார்கள். மாணவர்களுக்கே சந்தேகம் இருந்தால் வேறு பள்ளியைப் பார்த்துப் போகலாம்.

* 443 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to improve the syllabus, in elementary and secondary stages, in schools particularly in respect of Science?